**EA.NO. 04/2025 In EP 10/2003      PW-1**

நாள் : 21.04.2025

பெயர் : கௌரிமகேஷ்

த/பெ : மகேஸ்வரன்

**6, 7 மற்றும் 8 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீங்கள் எங்கு வசித்து வருகிறீர்கள் என்றால் சிப்காட்டில் வசித்து வருகிறேன். சிப்காட்டில் வசித்து வருவதை நிரூபிக்க ஆதார் அட்டை உள்ளிட்ட எதாவது ஆவணத்தை உங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆமாம். நீங்கள் அனுபவித்து வரும் சொத்தினை நேரடியாக வில்சனிடமோ அல்லது அவருடைய மனைவியிடமோ வாங்கவில்லை என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் வில்சனை உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிர்மனுதாரர்கள் சாந்தம்மாள், இந்திரா ராஜ்குமார் என்பவர்களையும் உங்களுக்கு தெரியாது என்றால் ஆமாம். 11.07.1986 வில்சன் காளியப்பன் என்பவருக்கு ஒரு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்த விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது.

15.05.1983 அன்று வில்சன் ராதாகிருஷ்ணன் என்பவருக்கு கிரய பத்திரம் எழுதிக்கொடுத்தார் அந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஏன் உங்கள் மனுவில் வில்சனிடமிருந்து கிரயம் பெற்ற நபரான ராதாகிருஷ்ணன் என்பவரை பற்றி சொல்லவில்லை என்றால் நான் ராதாகிருஷ்ணனிடம் நேரடியாக கிரயம் பெறவில்லை பாபு என்பவரிடம் தான் கிரயம் பெற்றேன் எனவே ராதாகிருஷ்ணன் என்பவரை என் மனுவில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை. நீங்கள் மனுவில் குறிப்பிட்டு சொல்லியுள்ள 15.05.1983, 12.09.1996, 24.02.2009 ஆவணங்களின் நபர்களை ஏன் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் அதை என் வழக்கறிஞரிடம் தான் கேட்க வேண்டும்.

**நீங்கள் உங்களுக்கு கிரயம் கொடுத்தவர்களை மனுவில் ஒரு தரப்பினராக சேர்க்காத காரணத்தால் மனு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல.**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

NAVEEN DURAIBABU

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by NAVEEN DURAIBABU
Date: 2025.04.22 17:10:12 +0530

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.